சுற்றுச்சூழல் தினம்: மரக்கன்றுகள் நடவு

சுற்றுச் சூழல் தினத்தை முன்னிட்டு, மதுரை மாவட்டம், மேலூர் அருகேயுள்ள நான்கு வழிச் சாலையில் மரக்கன்றுகளை நடவு செய்யும் பணியைத் தொடங்கி வைத்த நகர்மன்றத் தலைவர் முகமது யாசின். உடன் நகராட்சி ஆணையர் சண்முகம் உள்ளிட்டோர்.

மதுரை, ஜூன் 17: மதுரை மாவட்டம், மேலூர் நகராட்சி சார்பில் உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு, மரக்கன்றுகள் நடும் பணி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

மதுரை-திருச்சி நான்கு வழிச் சாலையில் மேலூர் அருகே நடைபெற்ற நிகழ்வுக்கு நகர்மன்றத் தலைவர் முகமது யாசின் தலைமை வகித்து, மரக்கன்றுகள் நடும் பணியைத் தொடங்கிவைத்தார். நகராட்சி ஆணையர் சண்முகம், பொறியாளர் முத்துக்குமார் ஆகியோர் முன்னிலைவகித்தனர். இதில், நான்கு வழிச் சாலையின் நடுவே உள்ள தடுப்புகளில் 500-க்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டன. இந்த நிகழ்வின் போது, சுகாதார ஆய்வாளர் தினேஷ்குமார், மேற்பார்வையாளர்கள், நகராட்சி அலுவலர்கள், பணியாளர்கள் பலர் உடனிருந்தனர்.

மதுரையில் உள்ள டாக்டர் திருஞானம் தொடக்கப் பள்ளியில் நடைபெற்ற உலக சுற்றுச்சூழல் தின நிகழ்வுக்கு வட்டாரக் கல்வி அலுவலர் அகிலத்து இளவரசி தலைமை வகித்தார். தலைமை ஆசிரியர் க.சரவணன் முன்னிலை வகித்தார். ஆசிரியை சௌ.பாக்கியலட்சுமி சுற்றுச்சூழல் மன்றத்தின் செயல்பாடுகள் குறித்து விளக்கினார். ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் பலர் கலந்து கொண்டனர்.

சேதமடைந்த சாலையால் அவதி...

மதுரை செல்லூர்-குலமங்கலம் சாலை சேதமடைந்துள்ளதால், அந்த வழியாகச் செல்லும் வாகன ஓட்டிகள் மிகவும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். சேதமடைந்த இந்தச் சாலையை சீரமைக்க வேண்டும் என பொதுமக்கள் வலியுறுத்துகின்றனர்.

கொடைக்கானல் கிராமத்தில் குளிர்காய திறந்தவெளியில் தீ மூட்டத் தடை

உயர்நீதிமன்றம் உத்தரவு

மதுரை, ஜூன் 17: கொடைக்கானல் மன்னவனூர் கிராமத்தில் குளிர்காய்வதற்காக திறந்த வெளியில் தீ மூட்ட (கேம்ப் பயர்) தடை விதித்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு புதன்கிழமை உத்தரவிட்டது.

கொடைக்கானலைச் சேர்ந்த பாலகிருஷ்ணன், செல்வகணபதி உள்ளிட்ட 5 பேர் சென்னை உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த பொது நல மனு:

ஆனைமலை புலிகள் காப்பகத்தின் எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டதில் கொடைக்கானல், திண்டுக்கல் வனப் பிரிவுகளின் சில பகுதிகள் புலிகள் காப்பக இடையகப் பகுதியாகசேர்க்கப்பட்டன. இந்த விரிவாக்கத்தில் பூண்டி, மன்னவனூர், கூக்கால் ஆகிய கிராமங்கள் வழியாக ஆண்டிபட்டி வரையிலான சில வனப் பகுதிகள் இடம் பெறுகின்றன.

இந்தப் பகுதிகளில் புதிய கட்டுமானங்களை எழுப்ப தேசிய வன விலங்கு வாரியத்தில் முன்அனுமதி பெற வேண்டும். ஆனால், எந்தவித முன் அனுமதியும் இல்லாமல் கொடைக்கானல் மன்னவனூர் புலிகள் காப்பக இடையகப் பகுதிகளில் வணிகக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. இந்தக் கட்டடங்களை இடித்து அகற்றவும், புதிய கட்டுமானங்களை மேற்கொள்ளத் தடை விதித்தும் உத்தரவிட வேண்டும் என அவர்கள் கோரினர்.

இந்த மனு, உயர்நீதிமன்ற நீதிபதிகள் சதீஷ்குமார், ஜோதிராமன் அமர்வு முன் புதன்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது, இந்தப் பகுதியில் கட்டப்பட்ட தனியார் விடுதிகளின் அருகே திறந்த வெளியில் குளிர்காய்வதற்காக தினமும் தீ மூட்டப்பட்டு, அதன் அருகே இசை நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. இதனால், சுற்றுச்சூழல் பாதிக்கப்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு:

தனியார் விடுதிகளுக்கு வெளியே குளிர்காய தீ மூட்டவும் (கேம்ப்பயர்), இசை நிகழ்ச்சிகள் நடத்தவும் தடை விதிக்கப்படுகிறது. இந்த மனு தொடர்பாக, தமிழக வனத் துறை முதன்மைச் செயலர், ஆனைமலை புலிகள் காப்பக தலைமை வனப் பாதுகாவலர் பதில் மனு தாக்கல் செய்ய வேண்டும். இந்த வழக்கு, வனம் தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் அமர்வுக்கு மாற்றப்படுகிறது என்றனர் நீதிபதிகள்.

மின் மயானம், நாய்கள் காப்பகத்தில் மாநகராட்சி ஆணையர் ஆய்வு

மதுரை, ஜூன் 17: மதுரை தத்தனேரி மின் மயானம், நாய்கள் காப்பகத்தில் மாநகராட்சி ஆணையர் கௌரவ் குமார் செவ்வாய்க்கிழமை ஆய்வு செய்தார்.

இதுகுறித்து மாநகராட்சி நிர்வாகம் சார்பில் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு:

மாநகராட்சியின் 29-ஆவது வார்டுக்குள்பட்ட செல்லூர் வாகன பணிமனை அருகில் செயல்படும் நாய்கள் காப்பகத்தில் ஆணையர் கௌரவ் குமார் ஆய்வு செய்து, இந்தக் காப்பகத்துக்கு நாள்தோறும் வரும் நாய்களை முறையாகப் பராமரித்து சிகிச்சை, கருத்தடை, வெறிநோய் தடுப்பூசிப் பணிகளை முறையாக மேற்கொள்ளுமாறு கால்நடை மருத்துவர்களிடம் அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, 31-ஆவது வார்டுக்குள்பட்ட டாக்டர் தங்கராஜ் சாலை மாநகராட்சி நீச்சல் குளம் எதிரில் அமைக்கப்பட்ட நாய்கள் கருத்தடை மையத்திலும் அவர் ஆய்வு செய்தார். இதைத் தொடர்ந்து, அருள்தாஸ்புரம் பகுதிகளில் குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர், புதை சாக்கடை பணிகள், நரிமேடு சி.எஸ்.ஐ. தேவாலயம் அருகே புதை சாக்கடை அடைப்பைச் சரிசெய்யும் பணிகள், மேலமடை, கோமதிபுரம் ஆகிய பகுதிகளில் வீடுகளில் முல்லைப் பெரியாறு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் கீழ், குடிநீர் இணைப்பு, விநியோகம், சுத்தமான குடிநீர் வழங்கப்படுகிறதா என ஆய்வு செய்தார்.

தத்தனேரி பகுதியில் உள்ள மின் மயானத்தில் செவ்வாய்க்கிழமை ஆய்வு செய்த மாநகராட்சி ஆணையர் கௌரவ் குமார்.

பின்னர், தத்தனேரி பகுதியில் ரோட்டரி அறக்கட்டளை மூலம் பராமரிக்கப்படும் மின் மயானத்தின் அடிப்படை வசதிகள் குறித்தும், நவீன குப்பை பரிமாற்ற நிலையத்தின் கட்டுமானப் பணிகளையும் ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது உதவி ஆணையர்கள் ரவிக்குமார், பிரபாகரன், உதவி நகர்நல அலுவலர் அபிஷேக், மக்கள் தொடர்பு அலுவலர் மகேஸ்வரன், செயற்பொறியாளர் பாக்கியலட்சுமி, உதவி செயற்பொறியாளர்கள் காமராஜ், மயிலேறிநாதன், ஆரோக்கிய சேவியர், மாமன்ற உறுப்பினர் லோகமணி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

உயர் கல்வி சேர்க்கை: நாளை சிறப்பு குறைதீர் முகாம்

மதுரை, ஜூன் 17: பள்ளி மாணவர்கள் உயர் கல்வியில் சேர்வதற்கான சிறப்பு குறைதீர் முகாம் மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை (ஜூன் 19) நடைபெறும் என மாவட்ட ஆட்சியர் ப.ஆகாஷ் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

மதுரை மாவட்டத்தில் 100 சதவீத உயர் கல்வி சேர்க்கையை உறுதி செய்யும் வகையில், மாவட்டத்திலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகளில் 2025-26-ஆம் கல்வியாண்டில் 12-ஆம் வகுப்பு பொது தேர்வு எழுதிய மாணவர்களில் உயர் கல்வியில் சேர்ந்தோர், சேராதோர், தேர்வில் தோல்வியுற்றோர், தேர்வு எழுதாதோர் போன்ற மாணவர்களின் தற்போதைய உயர் கல்வி சேர்க்கையை உறுதி செய்ய பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக, இது வரை உயர் கல்விக்கு விண்ணப்பிக்காத மாணவர்கள், உயர் கல்வியில் சேர்வதற்கு உதவி தேவைப்படும் பெற்றோர்கள் இருவரையும் இழந்த மாணவர்கள், ஒரு பெற்றோரை இழந்த வருமானமின்றி உள்ள மாணவர்கள், மாற்றுத் திறன் கொண்ட மாணவர்கள், வங்கிக் கடன் தேவையுள்ள மாணவர்கள், உயர் கல்வி சேர்க்கை தொடர்பான ஆலோசனை பெற வேண்டிய மாணவர்களுக்கான சிறப்பு குறைதீர் முகாம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் நெய்தல் அரங்கில் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறுகிறது.

இதில் 12-ஆம் வகுப்பு முடித்த அனைத்து மாணவர்களுக்கும் (தேர்ச்சி பெற்ற, தேர்ச்சி பெறாத, தேர்வு எழுதாத), பள்ளிப் படிப்பை இடையில் நிறுத்திய உயர் கல்வி பயில ஆர்வமுள்ள மாணவர்கள், இதுவரை உயர் கல்விக்கு விண்ணப்பிக்காத மாணவர்கள், உயர் கல்வி சேர்க்கை தொடர்பாக உதவி தேவைப்படும் மாணவர்கள் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு இந்த முகாமில் கலந்து கொள்ளலாம்.

மேலும், இந்த முகாமில் பள்ளிகளில் சேராத பள்ளி வயது குழந்தைளும், 8, 10-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்று அடுத்த வகுப்புகளில் சேராத மாணவர்களும் கலந்து கொள்ளலாம்.

இது தொடர்பான கூடுதல் விவரங்களுக்கு 97888 58744, 0452-2522995 ஆகிய மாவட்ட கட்டுப்பாட்டு அறை எண்களைத் தொடர்பு கொள்ளலாம் என்றார் அவர்.

கனரா வங்கி Canara Bank
சிண்டிகேட் Syndicate

விற்பனை அறிவிப்பு

கடன் வசூல் மேலாண்மைக் கிளை, கோயம்புத்தூர்.

கடனீட்டு சொத்துக்கள் ஒரைக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையுடனான (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) உடன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பு.

இதன் மூலம் குறிப்பாக கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாதமளித்தவர்கள் மற்றும் பொதுமக்களுக்குத் தெரிவிப்பது என்னவென்றால், கடன் வழங்கிய வங்கியால் பிணையத்திற்குள்ளான/ஈடுவைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தானது, **கனரா வங்கியின்** சம்பந்தப்பட்ட கிளையின், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் கவாதீனம் (கீழே பட்டியலில் குறிப்பிட்டபடி) செய்து கொள்ளப்பட்டது, கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாதமளித்தவர்கள் ஆகியோரிடமிருந்து கடன் வழங்கிய வங்கிக்கு வரவேண்டிய கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிலுவைகளுக்காக 'எங்குள்ளதோ உள்ளபடி' 'என்ன உள்ளதோ அப்படியே' மற்றும் 'என்ன நிலையில் உள்ளதோ உள்ளபடி' என்கிற நிலையில் கீழ்வரும் விபரப்படி விற்பனை செய்யப்படுகிறது.

கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாதமளித்தவர்கள் பெயர் மற்றும் விலாசம் : 1. M/s. ப்ரியம் ஆயில் மில்ஸ், எண்.269/2, நெடுங்குளம் பெயின் ரோடு, விரதனூர், மதுரை தெற்கு தாலூகா, மதுரை – 625 022, **2.திருமதி.கனிமொழி. J (பங்குதாரர்),** க/பெ. ஜெயராம், எண்.1/3/12, சின்னக்கண்மாய், C M R ரோடு, மதுரை வடக்கு, மதுரை – 625 009, **திரு.பிரித்திவ் குமார் மணிகண்டன், (பங்குதாரர்),** த/பெமணிகண்டன், எண்.61, கள்ளுக்கடை வீதி, வைகை வடகரை, ஆழ்வார்புரம், மதுரை வடக்கு, மதுரை – 625 002, **11.06.2026 தேதி வரை நிலுவைத் தொகை : ரூ.6,82,98,090.27 (ரூபாய் ஆறு கோடியே எண்பத்து இரண்டு லட்சத்து தொண்ணூற்று எட்டாயிரத்து தொண்ணூறு மற்றும் பைசா இருபத்து ஏழு மட்டும்)** மற்றும் **12.06.2026** தேதியிலிருந்து வட்டி, பிற செலவுகள்.

சொத்து விபரம் : சொத்து–1 : மதுரை மாவட்டம், மதுரை தெற்குப் பதிவு மாவட்டம், மதுரை தெற்கு இணை I சார் பதிவு மாவட்டம் முன்பாக, தற்போது சாமநத்தம் சார் பதிவு மாவட்டம், மதுரை தெற்கு தாலூகா, வொதனூர் கிராமம், மறு சர்வே எண்.269 ல் உள்ள 6 ஏக்கர் 9 சென்ட், இதில் கிழபுற பகுதி 3 ஏக்கர் 9 சென்ட், உட்பிரிவின்படி பட்டா எண்.791, மறு சர்வே எண். 269/2 ல் உள்ள 1.22.5 ஹெக்டேர், அதாவது 3 ஏக்கர் 2 சென்ட் புஞ்சை நிலம், இதில் கிழபுற பகுதி 1 ஏக்கர் புஞ்சை நிலத்தின் **எல்லைகள் விபரம் :** வடக்கு – சிவா நகரின் பிளாட்டுகள் மற்றும் 30 அடி அகல பொது வழித்தடம், கிழக்கு – ஆலங்குளம் கண்மாய், தெற்கு – நந்து என்கிற சாமையன்சாம்பனுக்குச் சொந்தமான நிலம், மேற்கு – M.அம்பிகாவிற்குச் சொந்தமான நிலம். இவ்வெல்லைகளுக்குகிடையிலுள்ள 1 ஏக்கர் புஞ்சை நிலம். மேற்படி சொத்து, தற்போது உட்பிரிவாக பட்டா எண்.2254ன்படி, மறு சர்வே எண்.269/2C ல், வொதனூர் கிராமப் பஞ்சாயத்து எல்லைக்குள் உள்ளது.
நிர்ணயிக்கப்பட்ட விலை : ரூ.1,71,00,000/– முன்வைப்புத் தொகை : ரூ.17,10,000/– ஏல உயர்வு படங்கு : ரூ.1,00,000/–
சொத்து–2 : மதுரை மாவட்டம், மதுரை தெற்குப் பதிவு மாவட்டம், மதுரை தெற்கு இணை I சார் பதிவு மாவட்டம் முன்பாக, தற்போது சாமநத்தம் சார் பதிவு மாவட்டம், மதுரை தெற்கு தாலூகா, வொதனூர் கிராமம், மறு சர்வே எண்.269 ல் உள்ள 6 ஏக்கர் 9 சென்ட், இதில் கிழபுற பகுதி 3 ஏக்கர் 9 சென்ட், உட்பிரிவின்படி பட்டா எண்.791, மறு சர்வே எண்.269/2 ல் உள்ள 1.22.5 ஹெக்டேர், அதாவது 3 ஏக்கர் 2 சென்ட் புஞ்சை நிலம், இதில் நடுப் பகுதி 1 ஏக்கர் புஞ்சை நிலத்தின் **எல்லைகள் விபரம் :** வடக்கு – சிவா நகரின் பிளாட்டுகள் மற்றும் 30 அடி அகல பொது வழித்தடம், கிழக்கு – பிரித்திவ் குமாருக்குச் சொந்தமான நிலம், தெற்கு – நந்து என்கிற சாமையன்சாம்பனுக்குச் சொந்தமான நிலம், மேற்கு – S.முருகேஸ்வரிக்குச் சொந்தமான நிலம். இவ்வெல்லைகளுக்குகிடையிலுள்ள 1 ஏக்கர் புஞ்சை நிலம், கட்டிடத்துடன். மேற்படி சொத்து, தற்போது உட்பிரிவாக பட்டா எண்.2368 ன்படி, மறு சர்வே எண்.269/2B ல், வொதனூர் கிராமப் பஞ்சாயத்து எல்லைக்குள் உள்ளது.
நிர்ணயிக்கப்பட்ட விலை : ரூ.2,28,76,000/– முன்வைப்புத் தொகை : ரூ.22,87,600/– ஏல உயர்வு படங்கு : ரூ.1,00,000/–
முன்வைப்புத் தொகை (EMD) செலுத்தக் கடைசி நாள் : 06.07.2026 காலை 11.00 மணிக்கு முன்னதாக.
கவாதீன நிலை : அடையாள (Symbolic) கவாதீனம். நோட்டீஸ் தேதி : 15.06.2026

மின்-ஏலத் தேதி மற்றும் நேரம் : 06.07.2026
காலை 11.30 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரை.
(ஒவ்வொன்றிற்கும் 5 நிமிட கால அளவிலான அளவற்ற நீட்டிப்புகளுடன் – விற்பனை நிறைவு பெறும் வரை)
சொத்தினைப் பார்வையிடும் நாள் மற்றும் நேரம் : 03.07.2026 :
காலை 11.00 மணியிலிருந்து மாலை 4.00 மணி வரை

விற்பனை குறித்த விரிவான நிபந்தனை விபரங்களுக்கு மின்–ஏலத்தோடு தொடர்புடைய கனரா வங்கியின் இணையதளத்தின் (www.canarabank.com) 'இ–ஆக்ஷன் லிங்க்'கில் அணுகவும். அல்லது **கனரா வங்கியின் கோயம்புத்தூர், கடன் வசூல் மேலாண்மைக் கிளையின் அதிகாரபூர்வ அதிகாரியை** எந்தவொரு வேலை நாளிலும், அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளலாம். **(போன் : 9489043584) மின்னஞ்சல் : cb4712@canarabank.com**

மின் ஏலத்தின் தலைவாயில் (போர்டல்) : https://baanknet.com/

இடம் : கோயம்புத்தூர்
அதிகாரபூர்வ அதிகாரி
கனரா வங்கி

மேதகு கடன் வசூல் தீர்ப்பாயம், மதுரை O.A.No. 1019/17

இந்திய சிறு தொழில்கள் மேம்பாட்டு வங்கி (SIDBI), மதுரை கிளை, மதுரை மாவட்டம், அதன் துணை பொது மேலாளர் மூலம்
--- வாதி
--- எதிர் ---
1. திருமதி. ச. கீர்த்தனா, த/பெ. லேட். திரு. சத்தியவாண், கதவு எண்: 1/19, அழகமானகரி, சிவகங்கை-630553.
--- 4வது பிரதிவாதி

மேற்படி மேதகு தீர்ப்பாயத்தின் உத்தரவின் பேரில் இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது

மேற்படி மனுதாரர் வங்கிக்கு வரவேண்டிய கடன் தொகையை பின் வட்டி, சேவை தொகையுடன் வசூலிக்கும் பொருட்டு மேற்படி வாதி வங்கியினால் லேட்.திரு.சத்தியவாண் அவர்களுக்கு எதிராக தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வரும் மேற்படி வழக்கில் திரு.சத்தியவாண் அவர்களின் மறைவுக்கு பிறகு மேதகு தீர்ப்பாயம் I.A.Nos. 94/2025 & 95/2025-ன் மூலம் அவரின் சட்டப்படியான வாரிசு என்ற முறையில் தங்களை 4வது பிரதிவாதியாக சேர்த்து தாங்கள் ஆஜராவதற்காக வருகிற 01.07.2026 தேதியன்று வாய்தா ஏற்பட்டுள்ளது. எனவே 01.07.2026 அன்று மேற்படி தீர்ப்பாயத்தில் (BSNL Level - 4வது கட்டிடம், முதல் தளம், சி.டி.ஓ. காம்பவுண்ட், தல்லாகுளம், மதுரை-625002) காலை 11:00 மணியளவில் DRT Courtல் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ ஆஜராகி ஆட்சேபனை ஏதுமிருப்பின் தெரிவித்துக் கொள்ளலாம். தவறினால் அன்றைய தினம் சமூகம் தீர்ப்பாயத்தினால் தகுந்த உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

இரா.பாண்டிவேல் M.Com., B.L.,
வழக்கறிஞர், ஓம் சரவணபவ,
பிளாட் நம்பர் 62,
கே.கே.நகர், மதுரை-625020.

தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம்
சென்னை சரகம்–I
(மேற்பார்வை பொறியாளர், சென்னை சரகம் –I,
தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம், 18(9), 7வது தளம், தலைமை வளாக கட்டடம்,
முதல் பிரதான சாலை, சிஐடி நகர், சென்னை–35.
மின் அஞ்சல்: secctnhb@gmail.com, தொலைபேசி எண் – 044-24322070
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்: CC-I/01/2026-27 நாள்: 16.06.2026

பணியின் பெயர்	பணியின் தோராய மதிப்பு இஎம்டி எண்களில், ரூபாய் (சரக்கு மற்றும் சேவை வரி 18% உட்பட.)	முன் வைப்புத் தொகை ரூபாய்
சென்னை மாவட்டம், அண்ணா நகர் மேற்கு விரிவாக்கம், திருமங்கலத்தில் செயல்பட்டு வரும் 506 அரசு வாடகை குடியிருப்புகளின் 2026–2027 (16.07.2026 முதல் 31.03.2027 வரை) ஆண்டிற்கான வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்வது தொடர்பாக	73.16	47,000.00

1. ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஏலவை ஆவணங்களுக்கு https://tntenders.gov.in–ல் தெரிந்து கொள்ளவும்
2. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் கிடைக்கும் காலம் மற்றும் சமர்பிக்கப்படுவதற்கான நாள் மற்றும் நேரம் 18.06.2026, 11.00 A.M மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் சமர்பிக்கப்படுவதற்கான கடைசி நாள் மற்றும் நேரம் 02.07.2026, 11.00 A.M
3. ஒப்பந்தப்புள்ளி இணையதளத்தில் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம்: 02.07.2026 காலை 11.30 மணி
4. விரிவான ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கையினை https://tntenders.gov.in–ல் என்ற இணையதளத்தில் காணலாம்.

செ.ம.தொ.இ/ 2080 /ஒப்பந்தப்புள்ளி/2026
மேற்பார்வை பொறியாளர், சென்னை சரகம்–I

GOVERNMENT OF TAMILNADU
Forest Department
ELECTRONIC TENDER NOTICE

Ref.No.ERDDIV / 507 / 2025-JDO. Dated:10.06.2026

1.For details, visit www.tntenders.gov.in
2. Bids are invited by District Forest Officer, Erode Forest Division of TamilNadu State under Two Cover System for the following work.

SL. No.	Name of Work
1	Maintenance and Upgradation of the BT road from Thamaraikarai to Thalakarai Road is Km of 0/00 to 5/600 in length and 3.75m carriageway width at Bargur Range.

3. The Bid documents can be downloaded from www.tntenders.gov.in between 12.06.2026 and 13.07.2026,11.00 AM.
4. The Last Date and Time for submission of Bid documents: 13.07.2026 11.00 AM.
5. Opening of Bid documents will be held on 15.07.2026 11.00 AM at District Forest Office, Erode Forest Division, Mullaiyagam, Roja Nagar, Veerappanchathiram (P.O), Erode District - 638004.

District Forest Officer,
Erode Forest Division, Erode
DIPR /2041 / Tender / 2026

AGRO INDUS CREDITS LTD.
Door no 40/1166, Thadikkaran Centre, Palarivattom-682025,
Ph : 0484-2341288/89, info@agroindus.co.in
GSTIN : 32AABCA9670J1ZL, CIN No. : U65910KL1997PLC011088
Formerly Agro Indus Finance and Leasing India Limited

தங்க நகை ஏல அறிவிப்பு

எங்கள் நிறுவனத்தின் உத்தமபாளையம்,பெரியகுளம், வத்தலக்குண்டு, மதுரை காமராஜர் சாலை , திண்டுக்கல் பழனி சாலை, திண்டுக்கல் பேகம்பூர், வேடசந்தூர், ஒட்டன்சத்திரம் மற்றும் பழனி கிளைகளில் உள்ள தங்க நகைகளின் பேரில் கடன்பெற்று காலக்கெடு முடிந்தும் இதுவரை அசல் மற்றும் வட்டியினை செலுத்தாதோர் இவ்வறிவிப்பினை கண்டவுடன் தங்களது கடனை சரிசெய்ய அறிவுறுத்தப்படுகிறீர்கள். தவறும் பட்சத்தில் தங்களது நகைகளை **24.06.2026 புதன் கிழமை காலை 11.00 மணிக்குமேல்** அந்தந்த கிளைகளில் பகிரங்க ஏலம் விடப்படும் என்பதை இதன் மூலம் தெரியப்படுத்திக் கொள்கிறோம். தவிர்க்க முடியாத காரணங்களால் மேற்கண்ட ஏதாவதொரு கிளை அல்லது கிளைகளில் ஏலம் நடைபெறவில்லை என்றால் அதே ஏலம் எங்களது திண்டுக்கல் பழனி சாலை கிளையில் **02.07.2026 வியாழக்கிழமை** அன்று நடைபெறும். ஏல தேதி மற்றும் நடவடிக்கைகளை மாற்றவோ அல்லது நிறுத்தி வைக்கவோ நிறுவனத்திற்கு முழு அதிகாரம் உண்டு. இந்த அறிவிப்பே இறுதியானது .

உத்தமபாளையம்:00150102000003181,00150102000003194,00150102000003294,00150103100003589, 00150102000004338, 00150102000004337.
மதுரை காமராஜர் சாலை : 00280101300002822.
வத்தலக்குண்டு:00160102000002989.
பெரியகுளம்:00110102000003274,00110100100003703,00110102000003702,00110102000003704,00110102000003749.
திண்டுக்கல் பழனி சாலை : 00050102000002969, 00050102000002971,00050102000002973,00050102000003373,00050102000004063, 00050102000004065, 00050104000004960, 00050106500004966.
திண்டுக்கல் பேகம்பூர்: 00660102000001023, 00660102000001034, 00660102000001051,00660102000001089,00660102000001120, 00660103100001128,00660102000001119,00660102000001187,00660102000001883,00660102000001796, 00660102000001609, 00660104000002211,00660104000002293.
வேடசந்தூர்: 00060102000002166.
ஒட்டன்சத்திரம்:00120102000004536,00120102000004559,00120102000004674,00120102000004743,00120102000004752, 00120100200004795, 00120102000004928, 00120102000004943, 00120102000004946, 00120102000004984, 00120100100005745, 00120102000005318, 00120100200005333,00120100200005378, 00120100200005618, 00120102000005756,00120101300005890.
பழனி : 00290100200003477, 00290102000003614, 00290100200004643, 00290100200004785.

தேதி:18.06.26
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
அக்ரோ இண்டஸ் கிரெடிட்ஸ் லிமிடெட்.

பேங்க் ஆஃப் பரோடா
Bank of Baroda
PBB கிளை எண். 332, டயர் ரோடு, CMH சாலை ஜங்ஷன் அருகில், இந்திரா நகர், பெங்களூரு - 560 038
தொலைபேசி : 080-25205427. மின்னஞ்சல் : PBBBAN@bankofbaroda.co.in

அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு
பிற்சேர்க்கை IV A (பார்க்க – விதி 6 (2) & 8 (6)) க்கான விதி விலக்கு)

பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) சட்டம் 2002 உடன் படிக்க பிணைக்காப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 6(2) & 8(6) க்கான விதி விலக்கு - ன் கீழ் அசையா சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு
இதன் மூலம் பொது மக்களுக்கும் குறிப்பாக கடன்தாரர்(கள்), அடமானதாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(களுக்கும்) அறிவிக்கப்படுவது யாதெனில், ஜாமீன் பெற்று கடனளித்தவருக்கு அடமானம் செய்யப்பட்ட / கடன் பொறுப்பு ஏற்படுத்தப்பட்டு, ஜாமீன் பெற்று கடனளித்த பேங்க் ஆஃப் பரோடா – வின் அதிகாரப்பூர்வ அலுவலரால் கவாதீனம் எடுக்கப்பட்ட இதன் கீழ் விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்து, இதன் கீழ்குறிப்பிட்டுள்ள கணக்கு/களிலிருந்து நிலுவைகளை வசூலிக்கும் பொருட்டு, "இருக்கின்ற இடத்தில்", "இருக்கின்ற நிலையில்" மற்றும் "இருக்கின்றவற்றுடன்" என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும். ஜாமீன்தாரர்/கள் / ஜாமீன் சொத்து/க்கள் / நிலுவைகள் / அடிப்படை விலை / மின்னணு ஏல தேதி & நேரம், டேவணித்தொகை மற்றும் விலைப்புள்ளி அதிகரிப்பு தொகை ஆகியன இதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன.

வ/ கட் எண்.	கடன்தாரர்/கள் / ஜாமீன்தாரர்/கள் / அடமானதாரர்கள் பெயர் & முகவரி	அசையா சொத்தின் கருக்கமான விபரங்கள் (தெரிந்த விலாசங்கள் ஏதேனுமிருப்பின் அவற்றுடன்)	சொத்த நிலுவைத்தொகை	மின்னணு ஏல தேதி & நேரம்	1). அடிப்படை விலை 2). டேவணித்தொகை 3). விலைப்புள்ளி அதிகரிப்பு தொகை	கவாதீன நிலை (ஆக்கபூர்வ / கள கவாதீனம்)	சொத்து ஆய்வு தேதி & நேரம்
1	1). திரு துரை அழகர் ராஜா வீட்டு எண். 11/1, அன்னை இல்லம், 2 வது குறுக்கு, சர் AMV நகர், ராமமூர்த்தி நகர், பெங்களூரு - 560 016 2). திரு துரை அழகர் ராஜா, ஃப்ளாட் எண். 111, 1 வது தளம், ப்ளாக் 2, விங் B, "ஸ்ரத்தா ஒயிட் க்ளிஃப்" சர்வே எண். 82 & 83, பிட்ரஹள்ளி ஹோப்ளி, பெங்களூரு - 560 066 3). திரு துரை அழகர் ராஜா, 34, அயோதாமி ராம் நகர், மாடசாமி கோவில் தெரு, ராஜபாளையம், தமிழ்நாடு - 627 117	ஒருங்கிணைந்த ஷெட்யூல் A சொத்து - பெங்களூரு கிழக்கு தாலுக்கா, பிட்ரஹள்ளி ஹோப்ளி, சீகேஹள்ளி கிராமம், சர்வே எண். 82 ல் அமையப்பெற்ற 2 ஏக்கர் 10-3/4 குண்டாஸ் மற்றும் சர்வே எண். 83 ல் அமையப்பெற்ற 27-1/2 குண்டாஸ் பரப்புடன் குடியிருப்பு தேவைக்காக மாற்றப்பட்ட (சர்வே எண். 82 யைக்கொண்ட இந்த இடமானது, துணை ஆணையர், பெங்களூரு மாவட்டம், பெங்களூரு அவர்களால் பிறப்பிக்கப்பட்ட மாற்றலுக்கான உத்தரவு எண். B Dis. ALN(E)VB : SR.299/2004-05, தேதி - 06/12/2004) ன் படி மாற்றப்பட்டது மற்றும் (சர்வே எண். 83 யைக்கொண்ட இடமானது, துணை ஆணையர், பெங்களூரு மாவட்டம், பெங்களூரு அவர்களால் பிறப்பிக்கப்பட்ட மாற்றலுக்கான உத்தரவு எண். B Dis. ALN(E)VB/SR. 100/2005-06, தேதி - 28/10/2005) ன் படி மாற்றப்பட்டது உள்ளிட்ட சொத்துக்கள் அனைத்தும் ஒன்றுக்கொன்று அருகருகே அமைந்துள்ளதுடன் கூடிய அனைத்து இதர உரிமைகள் மற்றும் உடை